


**26. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 77-வது குடியரசு தினம் தேசப்பற்றுடன் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

2. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லி கடமை பாதையில் தேசிய கொடியை பறக்கவிட்டு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

3. புதுதில்லி தேசிய போர் நினைவு சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

4. சென்னையில் தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி தேசிய கொடியை பறக்கவிட்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

5. தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் இன்று நடைபெற்றன.

இனி விரிவான செய்திகள்

****************

குடியரசு தினம்

நாட்டின் 77-வது குடியரசு தினம் இன்று தேசப்பற்றுடன் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லி கடமை பாதையில் தேசிய கொடியை பறக்கவிட்டு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நாட்டின் பாரம்பரிய வழக்கப்படி தேசிய கொடி வானில் பறக்கவிடப்பட்டபோது 21 குண்டுகள் முழங்க தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

Music

சிறப்பு விருந்தினர்களாக ஐரோப்பிய ஆணையத்தலைவர் உர்சுலா வாண்டர் லேயன், ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அண்டோனியோ கோஸ்டா ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லி தேசிய போர் நினைவு சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதுடன் குடியரசு தின விழா இனிதே தொடங்கியது.

இதனை தொடர்ந்து பிரதமர் உள்ளிட்ட அனைத்து பிரதிநிதிகளும் குடியரசு தின அணிவகுப்பை கடமை பாதையிலிருந்து பார்வையிட்டனர்.

குடியரசு தலைவர் மாளிகையிலிருந்து குடியரசு தலைவர், சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் வீரர்கள் புடை சூழ

குதிரை பூட்டப்பட்ட ரதத்தில் கடமை பாதைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தேசிய கொடி பறக்கவிடப்பட்ட போது இந்திய விமான படையை சேர்ந்த நான்கு MI - 1 V ஹெலிகாப்டர்கள் தேசிய கொடி மீதும் பார்வையாளர்கள் மீதும் மலர்களை தூவியது.

தொடர்ந்து குடியரசு தின அணிவகுப்பு பிரம்மாண்டமாக கடமை பாதையில் மிடுக்குடன் தொடங்கியது.

முப்படை வீரர்களின் அணிவகுப்பும்,

ஐரோப்பிய யூனியனை சேர்ந்த ராணுவ வீரர்களும் அணிவகுப்பும் நடைபெற்றன.

இந்திய ராணுவத்தின் வலிமையை பறைசாற்றும் வகையில் ஆபரேசன் சிந்தூரின்போது பயன்படுத்தப்பட்ட பிரம்மோஸ் ஆகாஷ் ஏவுகணைகள், நவீன ஆயுதங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தேஜஸ் விமானங்கள் மற்றும் D90 பீரங்கிகள் அணிவகுப்பில் இடம்பெற்றன.

இந்திய கடற்படை குழுவில் 144 இளம் வீரர்கள் "வலுவான தேசத்திற்கு வலுவான கடற்படை" என்ற கருப்பொருளில் அணிவகுத்தனர்.

முன்னாள் படை வீரர்களின் அலங்கார ஊர்தி, இந்திய கடலோர காவல்படை, நீண்ட தூர கப்பல் எதிர்ப்பு ஏவுகணை, துணை ராணுவம் உள்ளிட்ட அணிவகுப்பு இடம்பெற்றன.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பாரம்பரியம் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு பார்வையாளர்களை கவர்ந்தது.

பாரம்பரியத்தையும், நவீனத்தையும் பிரதிபலிக்கும் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தியில் ஜல்லிக்கட்டு காட்சி சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

"வளமையின் மந்திரம் தற்சார்பு இந்தியா" எனும் தலைப்பில் தமிழ்நாட்டின் சார்பில் இந்த ஊர்தி பங்கேற்றது.

2 ஆயிரத்து 500 கலைஞர்கள் 30 ஊர்திகளில் இந்தாண்டு அணிவகுத்ததை அனைவரும் ஆரவாரத்துடன் கண்டுகளித்தனர்.

கோவையை சேர்ந்த தனியார் பள்ளி மாணவிகளின் சிறப்பு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அணிவகுப்பின் முத்தாய்ப்பாக அனைவரும் மிகவும் எதிர்பார்த்திருந்த வான் சாகச நிகழ்ச்சியில் 29 விமானங்கள் வான் மண்டலத்தை அலங்கரித்தன.

"வந்தே மாதரம் சுய சார்பு பாரதம்" என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்படும் இவ்விழாவில் 10 ஆயிரம் சிறப்பு பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

வந்தேமாதரம் குறித்த காணொளிகள் கடமை பாதை திரைகளில் ஒளிபரப்பபட்டன.

அணிவகுப்புக்கான சுற்று வட்டங்களுக்கு இந்தாண்டு நாடுமுழுவதும் பாயும் நதிகளின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.

இவ்விழாவில் சர்வதேச விண்வெளி மையம் சென்ற முதல் இந்தியரான விமான படை குரூப் கேப்டன் சுபான்ஷூ சுக்லாவிற்கு அசோக சக்ரா விருதை குடியரசு தலைவர் வழங்கினார்.

நிறைவாக தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தேமாதரம் என்ற பதாகைகளை ஏந்திய பலுன்கள் பறக்கவிடப்பட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

***************

குடியரசு தினம் தமிழகம்

சென்னை காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தேசிய கொடியை பறக்கவிட்டு முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து தமிழ்நாடு காவல் ஆயுதபடை கூட்டு குழல் முரசு இசை குழுவினர் உள்ளிட்ட காவல் துறையினரின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

இவ்விழாவில், முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சிறப்பாக பணிபுரிந்த காவலர்கள் உள்ளிட்டோருக்கு பதக்கங்களை வழங்கினார்.

வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் நீலகிரி தீயணைப்புத்துறையை சேர்ந்த சங்கர், சுரேஷ், ரமேஷ்குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது,

காந்தியடிகள் காவலர் பதக்க விருது, உள்ளிட்ட விருதுகளை முதலமைச்சர் வழங்கினார்.

சிறந்த காவல் நிலையத்திற்கான பரிசு மதுரை மாநகர காவல் நிலையத்திற்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து பல்வேறு மாநிலங்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் பள்ளி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

***************

குடியரசு தினம் மாவட்டங்கள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேசியகொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டதோடு, பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளையும் வழங்கினர்.

திருச்சி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தேசிய கொடியை ஏற்றிவைத்து சுதந்திர போராட்ட தியாகிகளை கவுரவித்தார்.

***************

அரசு அலுவலகங்கள்

திருச்சி அகில இந்திய வானொலி நிலையம், ரயில் நிலையம், விமான நிலையம், சுங்கத்துறை அலுவலகம், தலைமை தபால் நிலையம், பாரத மிகு மின் நிறுவனம், மதுரை ரயில்வே கோட்டம் உட்பட அனைத்து மத்திய மாநில அரசு அலுவலகங்களில் தேசிய கொடி ஏற்றப்பட்டு இனிப்புகள் வழங்கி குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது.

***************

திருச்சி உப்பு சத்தியாகிரகம்

தமிழ்நாடு வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக விழிப்புணர்வு இயக்கத்தின் சார்பில் திருச்சி உப்பு சத்தியாகிரக நினைவு ஸ்தூபியில் தேசிய கொடி ஏற்றப்பட்டது.

தேசிய ஒற்றுமை உறுதி மொழியும் ஏற்கப்பட்டது.

***************

கிராம சபை கூட்டம்

தமிழகம் முழுவதும் அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் இன்று நடைபெற்றன.

வரவு செலவு கணக்குகள் வெளியீடு, பல்வேறு திட்ட பயனாளிகள் தேர்வு, மத்திய மாநில அரசுகளின் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு உள்ளிட்டவை குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

***************

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவில் தை பூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்வுகளான திருக்கல்யாணம் வரும் 31ஆம் தேதியும்,

தேரோட்டம் வரும் ஒன்றாம் தேதியும் நடைபெறும்.

***************

கிரிக்கெட்

வதோதராவில் நடைபெறும் மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு – மும்பை இண்டியன்ஸை இன்று இரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

****************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது